*Crl.Misc. 40*

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM.

Calender
Miscellaneous
Preliminary Register Case No. of CC No. 4/2019
Sessions

Prosecution
Deposition of witness for Defence PW 1 (LW 1 )
சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| Name | : | வீ. கலைவாணன் |
| Father /Husband's Name | : | ஏ.வைத்திலிங்கம் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.12.2019

மு.வி

நான் 3 கூத்தனூர் கிராமத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன வேலனை எனக்கு தெரியும். அவர் என்னுடைய அண்ணன் ஆவார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 22.07.2017-ம் தேதியன்று மதியம் 3.00 - 3.30 மணியளவில் டீ வாங்குவதற்காக TVS Super XL இருசக்கர வாகனத்தில் கூத்தனூரிலிருந்து கொல்லுமாங்குடி சென்றுவிட்டு திரும்ப வீட்டிற்கு வரும்போது கொல்லுமாங்குடி இந்தியன் வங்கிக்கு எதிரில் கணேஷ் என்பவரது டீக்கடை அருகில் வரும்போது KPT தனியார் டூரிஸ்ட் பஸ் மயிலாடுதுறையிலிருந்து திருவாரூர் நோக்கி ரப்பாக தாறுமாறாக ஓட்டி வந்து எனது அண்ணன் மீது மோதிவிட்டார். அதில் எனது அண்ணன் வேலனுக்கு தலையில் காயம் ஏற்பட்டது. நான் 108 ஆம்புலன்சுக்கு போன் செய்து திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு போனேன். அங்கு பரிசோதித்த மருத்துவர் எனது அண்ணன் இறந்துவிட்டதாக தெரிவித்தார்கள். மறுநாள் காலையில் பேரளம் காவல்நிலையத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டி புகார் கொடுத்தேன். என்னிடத்தில் நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனுவில் கண்டுள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் மனு அ.த.சா.ஆ.1 ஆகும். போலீஸார் என்னை விசாரித்தார்கள். நான் விபத்தை பற்றி நடந்ததை சொன்னேன்.

எ.த.கு.வி

எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என எதிரிதரப்பு வழக்கறிஞரால் கூறப்பட்டு அது பதிவு செய்யப்பட்டது.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM.

Calender
Miscellaneous
Preliminary Register Case No. of CC No. 4/2019
Sessions

Prosecution
Deposition of witness for Defence PW 2 (LW2 )
சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| Name | : | பாஸ்கரன் |
| Father /Husband's Name | : | ராமசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.12.2019

மு.வி

நான் கூத்தனூர் மேலத்தெருவில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 கலைவாணனை எனக்கு தெரியும். விபத்தில் இறந்துபோன வேலன் அவர்களையும் எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 22.07.2017-ம் தேதியன்று மதியம் சுமார் 3.00 மணியளவில் டீ வாங்குவதற்காக XL TVS வாகனத்தில் கொல்லுமாங்குடியில் இருந்து திரும்ப வரும்போது மயிலாடுதுறையிலிருந்து KPT என்ற தனியார் பேருந்து வேகமாக வந்து வேலன் வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதியது. அவ்வாறு மோதியதில் அவருக்கு பலத்த காயம் ஏற்பட்டது. சம்பவம் நடந்தது கொல்லுமாங்குடி இந்தியன் பேங்க் எதிரில்தான் நடந்தது. அவரை 108 ஆம்புலன்ஸ் மூலமாக திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு போனார்கள். போலீஸார் விசாரித்தார்கள். நான் நடந்த விவரம் சொன்னேன். விபத்தின் காரணமாகத்தான் வேலன் இறந்துபோய்விட்டார்.

எ.த.கு.வி

எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என எதிரிதரப்பு வழக்கறிஞரால் கூறப்பட்டு அது பதிவு செய்யப்பட்டது.

*Crl.Misc. 40*

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM.

Calender
Miscellaneous
Preliminary Register Case No. of CC No. 4/2019
Sessions

Prosecution
Deposition of witness for Defence PW3 (LW 4 )
சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| Name | : | மகேந்திரன் |
| Father /Husband's Name | : | வேலு |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.12.2019

மு.வி

நான் கூத்தனூர் மேலத்தெருவில் ஓட்டுநராக வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1, 2 மற்றும் விபத்தில் இறந்துபோன வேலன் அவர்களையும் எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 22.07.2019-ம் தேதியன்று மதியம் சுமார் 3.30 மணியளவில் டீ வாங்குவதற்காக Super XL TVS வாகனத்தில் கொல்லுமாங்குடியில் இருந்து திரும்ப வரும்போது கொல்லுமாங்குடி Indian Bank ATM எதிரில் வரும்போது டிராவல்ஸ் தனியார் பேருந்து வேகமாக வந்து கலைவாணன் அண்ணன் வேலன் மீது அவருக்கு பலத்த காயம் ஏற்பட்டது. திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு போய் சேர்த்தார்கள். போலீஸார் என்னை எதுவும் விசாரிக்கவில்லை.

எ.த.கு.வி

எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என எதிரிதரப்பு வழக்கறிஞரால் கூறப்பட்டு அது பதிவு செய்யப்பட்டது.